[1979 ஏப்ரல் 27

இ. உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகளை எடுத்துக்கொள்வது குறித்து.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : தலைவர் அவர்களே, நாளைக்கு சட்ட மன்றக் கூட்டம் முடிய இருக்கிறது. நாங்கள் நூற்றுக்கணக்கான கேள்விகளைக் கொடுத்திருக்கிறோம், அதைப்பற்றிக்கூட இங்கே கேட்கக் கூடாதா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் நாளைக்கு அதை வைத்திருக்கிறேன். கடைசி நாளன்று அந்த வாய்ப்புகள் தருவது உண்டு. இதற்கு முன்னால் நடவடிக்கைக் குறிப்புகளைப் பார்த்தால் அப்படி இல்லை என்பது தெரியும். ஆனால் இப்போது கவன ஈர்ப்புத் தீர்மானம், ஒத்தி வைப்புத் தீர்மானம் எதுவாக இருந்தாலும் உறுப்பினர்கள் அதைப் பற்றி எழுப்பி அதை பதிவேட்டிலே பதிவு செய்துகொள்ளலாம் என்று அனுமதித்து வருகிறேன். இன்று வேண்டாம். நாளைக்கு எழுப்புங்கள், பதிவேட்டிலே ஏற்றிக்கொள்ளலாம்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : நாளைக்கு ஏராளமான பில்கள் இருக்கின்றன, அப்படிப்பட்ட சூழ்நிலையில் நீங்கள் எல்லாம் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வீர்கள். நாங்கள் கேள்விகளைக் கொடுத்து நாற்பது நாட்களுக்கு மேலாக ஆகிவிட்டன........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் இந்த அவையிலே அதை அனுமதிக்கிறேன், நாளைய தினம் அவரவர்கள் சுருக்கமாகச் சொன்னால் பதிவேட்டிலே ஏற்றலாம், பதிவாகட்டும்.

திரு. கரு. இராம. கரியமாணிக்கம் அம்பலம் : நான் இந்த மாதம் ஒன்பதாம் தேதி ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாளைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

4. உரிமைப் பிரச்சினைகள்—(தீர்ப்பு).

அ. நாளேடுகள் மீது

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை நடவடிக்கைகள் பத்திரிகைகளில் வெளிவந்திருப்பது பற்றிய சில அவை உரிமை மீறல் குறித்த அறிவிப்புகள் கொடுக்கப்பட்டு, பேரவையில் எழுப்பப்பட்டன.

1979 ஏப்ரல் 27] [பேரவைத் தலைவர்]

பேரவையில் சில சமயங்களில் விரும்பத் தகாத நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. பல சமயங்களில் இம்மாதிரியான நிகழ்ச்சிகளை யொட்டிய பேச்சுக்கள் பேரவைக் குறிப்புகளிலிருந்து நீக்கப்படுகின்றன. நிகழ்ச்சிகள் பேரவைக் குறிப்புகளில் இடம் பெறுவதில்லை. நிகழ்ச்சிகள் வெளியே தெரிய வேண்டாம் என்ற நோக்கத்துடன்தான் குறிப்புக்கள் நீக்கப்படுகின்றன. சில பத்திரிகைகள் நீக்கப்பட்ட சொற்களை வெளியிடாவிட்டாலும், அந்த நிகழ்ச்சிகளை வெளியிட்டு அது பற்றிய தம் கருத்துக்களையும் வெளியிடுகின்றன. இது ஒரு தவறான போக்கு ஆகும். நிகழ்ச்சிகள் பற்றிய பேச்சுக்கள் நீக்கப்படும்போது நிகழ்ச்சிகளும் இடம் பெறாமல் இருப்பதுதான் முறை. எனவே, பேச்சுக்கள்தான் நீக்கப்பட்டன, நிகழ்ச்சிகள் குறித்து எதுவும் அறிவிக்கப்படவில்லை, ஆகவே நிகழ்ச்சிகள் பற்றிய செய்திகளை வெளியிடலாம் என்று பத்திரிகைகள் கருதினால் அது தவறாகும். பேச்சுக்கள் நீக்கப்படும்போது அவற்றிற்குக் காரணமான நிகழ்ச்சிகளும் இடம் பெறாதவாறு பார்த்துக்கொள்வதுதான் முறையாகும். நான் இதைச் சொல்வது பொதுப்படையான அவை உரிமை மீறல் பிரச்சினைகளைகள் பற்றி என்னுடைய கருத்துதான்.

முறையாக நீக்கப்பட்ட நிகழ்ச்சிகளையோ, சொற்களையோ வெளியிடுவது விதி முறைகளுக்கு முரணானது. அவை உரிமையை மீறுவது ஆகும். இப்படிப்பட்ட செயலுக்கு எந்தவிதமான சமாதானமும் ஏற்கக் கூடியது அல்ல. தவறுதலாக வெளியிட்டு விட்டால் அதற்காக அப் பத்திரிகைகள் வருத்தம் தெரிவித்து மன்னிப்பு கேட்பதுதான் முறை. நேர்ந்த தவறுக்குக் காரண காரியங்களைக் காட்ட முற்படுவது முறையற்ற செயலாகும்.

இதேபோல்தான், பேரவையிலே பேசப்படாத ஒன்றைப் பேசியதாக வெளியிடுவதும் முறைகேடான செயலாகும். இதுவும் அவை உரிமை மீறிய செயல்தான்.

பேரவையில் உறுப்பினர்கள் நடந்து கொள்ளும் முறை பற்றியோ அல்லது அவர்கள் கூறும் கருத்துக்களைப் பற்றியோ, விமரிசனம் செய்வது தவறாகாது. அப்படிச் செய்யப்படும் விமரிசனங்கள் ஒருதலைப் பட்சமாக இருத்தல் கூடாது. நடுநிலையில் இருந்து செய்யப்படும் விமரிசனங்கள் கடுமையான வார்த்தைகளைக் கொண்டிருந்தால்கூட அது அவை உரிமை மீறியது ஆகாது. ஆனால் அப்படிச் செய்யப்படும் விமரிசனம் உறுப்பினர்களின்மீது உள் நோக்கம் அல்லது களங்கம் கற்பிப்பதாக இருக்கக் கூடாது. அதுவும், பொதுவாக அவை முழுவதையும் இழிவுப் படுத்துவதாக அல்லது களங்கம் கற்பிப்பதாக இருக்கக் கூடாது என்பதுதான் மரபு.

மேலே குறிப்பிட்டுள்ள வழிமுறைகளை ஆதாரமாக வைத்துப் பேரவையில் எழுப்பப்பட்ட சில அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினைகள் மீது என் தீர்ப்பை வழங்கலாம் என்று நினைக்கிறேன்.

முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் பேரவை நிகழ்ச்சிகள் குறித்து திருச்சியில் ஒரு பொதுக் கூட்டத்தில் திரு. நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் பேசியதாக ''மாலை முரசு'' பத்திரிகையில் வந்த செய்தியை ஆதாரமாக வைத்து ஒரு அவை உரிமை மீறல் பிரச்சினையைக் கொண்டு வந்தார். பத்திரிகைச் செய்தியை மட்டும் ஆதாரமாக வைத்து அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினையை எழுப்புவது மரபல்ல. பேரவை நிகழ்ச்சி பற்றியதாக இருந்தால் பத்திரிகைச் செய்தியை வைத்து அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினையை எழுப்பினால், பேரவை நடவடிக்கைக் குறிப்புகளைப் பார்த்து முடிவெடுக்க வாய்ப்பு உண்டு. எனவே மற்ற நிகழ்ச்சிகள் குறித்துப் பத்திரிகைச் செய்திகளை மட்டும் வைத்து அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினையை எழுப்ப அனுமதி அளிப்பதில்லை. எனினும், திரு. சுப்பு அவர்கள் பிரச்சினையை எழுப்ப அனுமதிக்கப்பட்டு, திரு. நாவலர் நெடுஞ்செழியன் அவர்களிடமும் இது குறித்து ஒரு விளக்கம் கேட்கப்பட்டது. தாம் நீண்ட நாட்கள் பேரவையில் உறுப்பினராகவும், எதிர்க் கட்சித் தலைவராகவும், அமைச்சராகவும், பேரவை முன்னவராகவும் இருந்திருப்பதால் அவைக்குக் களங்கம் கற்பிக்கும் வகையில் தாம் எதுவும் பேசவில்லை என்றும், தாம் பேசியதை அப்பத்திரிகை கூட்டியும், குறைத்தும், திரித்தும் வெளியிட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். ''மாலை முரசு'' பத்திரிகை (திருச்சி) கொடுத்துள்ள விளக்கத்தில், தமது நிருபர் கொடுத்ததைத் தாங்கள் வெளியிட்டதாகவும், எதிர்க்கட்சிகளுக்குக் களங்கம் கற்பிக்கும் நோக்கம் தங்களுக்கு இல்லை என்றும், ஆனால் எதிர்க்கட்சிகள் அவ்வாறு கருதினால் தாங்கள் அச்செய்தியை வெளியிட்டதற்கு வருந்துவதாகவும் தெரிவித்துள்ளனர். பத்திரிகை ஒரு செய்தியை வெளியிடும்போது அப் பத்திரிகைதான் அதற்குப் பொறுப்பேற்க வேண்டும். எனவே, தவறான பேச்சை வெளியிட்டு, அது எதிர்க் கட்சி உறுப்பினர்களுக்குக் களங்கம் கற்பிப்பதாக கருதப்படுமானால் அதற்காக வருந்துவதாக கூறுவதை ஏற்பதற்கில்லை.

அடுத்து, திரு. ஜேம்ஸ் அவர்களும், திரு. விஜயராகவன் அவர்களும் மற்றும் திரு. ரகுமான்கான் அவர்களும் இதே பொருள் குறித்து ''மாலை முரசு'' பத்திரிகை மீது அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினையை எழுப்பியுள்ளனர். மேலே கூறப்பட்ட கருத்தே இதற்கும் பொருந்தும்.

1979 ஏப்ரல் 27] [பேரவைத் தலைவர்]

அடுத்து, திரு. திருப்பூர் மணிமாறன், டாக்டர் கே. சமரசம், மற்றும் திரு. கே.ஏ. செங்கோட்டையன் ஆகியோர் ''தினகரன்'' ''அலை ஓசை'' மற்றும் ''முரசொலி'' ஆகிய பத்திரிகைகள் மீது, பேரவை நடவடிக்கைக் குறிப்புகளிலிருந்து நீக்கப்பட்ட நிகழ்ச்சியைப் பிரசுரித்துள்ளதாக அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினையை எழுப்பினார்கள். பேரவையில், கேள்வி நேரம் ஆரம்பிக்கும் சமயம் திரு. கிட்டப்பா அவர்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சி பற்றியது இது. நிகழ்ச்சி நடந்து, அதைத் தொடர்ந்து ஒரு சிறு விவாதம் நடந்து உடனே அந்நிகழ்ச்சி பேரவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. பத்திரிகைகள் தம் விளக்கத்தில் ''திடீர் திடீர் என்று நீக்கப்படும் உத்தரவு வருகிறது'' என்றும், ''பிறகு அவை மாற்றப்படுகின்றன'' என்றும், எனவே ''எதை வெளியிடுவது, எதை வெளியிடாமல் இருப்பது என்பது தெரியவில்லை'' என்றும் குறிப்பிட்டுள்ளனர். இத்தகைய சந்தேகம் ஏற்படும் போது வெளியிடாமல் இருப்பது தான் சரி, அல்லது பேரவைத் துறையிடம் விளக்கம் பெற்று பிறகு வெளியிடுவது தான் சரி என்று தோன்றாமல் வெளியிட்டு விட்டு, அதற்குக் காரண காரியங்கள் கற்பிக்க முனைவது சரியான முறை ஆகாது. இப்போக்கு கண்டிக்கத்தக்கது.

அடுத்து, திரு. எஸ்.ஆர். இராதா அவர்கள் ''அலை ஓசை'' மற்றும் ''இந்தியன் எக்ஸ்பிரஸ்'' ஆகிய நாளேடுகளின் மீது அவையில் நடக்காத நிகழ்ச்சி குறித்து கட்டுரை எழுதியுள்ளன என்பதால் அவை உரிமை மீறல் ஏற்பட்டுள்ளது என்று பிரச்சினையை எழுப்பியுள்ளார். பேரவைக் குறிப்பில் எந்த இடத்திலும் குறிப்பிடப்படாத நிகழ்ச்சிகளை அவையில் நடந்ததாக எழுதி அதற்காக ஒரு கட்டுரையும் அப்பத்திரிகைகள் எழுதியிருப்பது வருந்தத்தக்கது. விளக்கம் அளிக்கும் போதும் தங்கள் கருத்தை உறுதி செய்யும் வகையில் கருத்துத் தெரிவித்திருப்பது கண்டிக்கத்தக்கது.

[முற்பகல் 10-00.]

அடுத்து, திரு உமாநாத் அவர்கள் ''மன்றம்'' பத்திரிகையின் மீது ஒரு அவை உரிமை மீறல் பிரச்சினைக்கான அறிவிப்புக் கொடுத்து, அவையிலும் எழுப்பியுள்ளார். பேரவையில் நடந்த ஒரு நிகழ்ச்சி பற்றிய கட்டுரையில், அந்நிகழ்ச்சி பற்றி விமரிசனம் செய்யப்பட்டுள்ளது. சில இடங்கள் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு, குறிப்பாக திரு. உமாநாத் அவர்களுக்கு, நோக்கம் கற்பிப்பதாக இருக்கிறது என்று திரு. உமாநாத் அவர்கள் கூறியுள்ளார். பேரவை நிகழ்ச்சிகள் பற்றி விமரிசனம் செய்வதில் தவறில்லை. இது குறித்து அளித்துள்ள விளக்கத்தில் ''இது ஒரு அரசியல் விமரிசனம்'' என்றும், தாம் யாரையும் களங்கப்படுத்தும் எண்ணத்துடன் இதை எழுதவில்லை என்றும், திரு. நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் கூறியுள்ளார். கடுமையான

வார்த்தைகள் உபயோகப்படுத்தி விமரிசனம் செய்வதில் தவறில்லை. ஆனால் நோக்கம் கற்பிப்பது தவறாகும். ''மன்றம்'' இதழின் கட்டுரையில் அரசியல் விமரிசனம் உள்ளது. எந்த உறுப்பினருக்கும் நோக்கம் கற்பிக்கப் பட்டுள்ளதாக நான் கருதவில்லை.

அடுத்து, திரு எஸ்.ஆர். இராதா அவர்கள் ''தினமணி'' மற்றும் ''இந்தியன் எக்ஸ்பிரஸ்'' நாளேடுகள் மீது பேரவையில் கூறப்படாதவற்றைக் கூறியதாக வெளியிட்டுள்ளதால் அவை உரிமை மீறல் ஏற்பட்டுள்ளதென்று எழுப்பியுள்ளார். பேரவை நடவடிக்கைக் குறிப்பில் இல்லாதவற்றை பேரவையில் கூறப் பட்டதாக வெளியிடுவதும் அவை உரிமை மீறல் குற்றத்திற்கு உள்ளாகும். இது குறித்து அப்பத்திரிகைகள் அளித்த விளக்கம் ஏற்கக்கூடியதாக இல்லை.

அடுத்து, திரு. எஸ்.ஆர். இராதா அவர்கள் ''துக்ளக்'' ஏட்டின் மீதும் இதேபோல் அவையில் நடக்காத நிகழ்ச்சியை, ''இந்தியன் எக்ஸ்பிரஸ்'' நாளேட்டில் வெளியான கட்டுரையைச் சுட்டிக் காட்டி சில தவறான கருத்துக்களை வெளியிட்டுள்ளது என்று அவை உரிமை மீறல் பிரச்சினையை எழுப்பியுள்ளார். ஏற்கனவே குறிப்பிட்டபடி பேரவையில் நடைபெறாத நிகழ்ச்சியை நடந்ததாக வைத்துக் கொண்டு விமரிசனம் செய்வது கண்டிக்கப்பட வேண்டிய ஒன்று. ''துக்ளக்'' பத்திரிகை அளித்துள்ள விளக்கம் ஏற்கக் கூடியதாக இல்லை.

பேரவையையோ, பேரவையின் எந்த உறுப்பினரையுமோ கண்டித்து, அல்லது அவர்கள் பேச்சை அல்லது செயலைப் பற்றி விமரிசனம் செய்து வெளியிடப்படும் செய்திகள் அல்லது கட்டு ரைகள் அல்லது கருத்துக்கள் மிகுந்த கவனத்துடன் செய்யப்பட வேண்டும். கடுமையான வார்த்தைகளால் விமரிசனம் செய்தால் கூட, கண்ணியமான முறையில் செய்ய வேண்டும். தவறு ஏற்படுமானால் அதற்காக வருத்தம் தெரிவித்து, மன்னிப்பு கேட்பதுதான் முறை, ''தவறுதலாகக் கருதப்படுமானால் வருந்துகிறோம்'' என்று கூறுவது முறையல்ல.

பத்திரிகைகள் பேரவை நடவடிக்கைகளை வெளியிடும்போது மிகக் கவனத்துடன், மிக எச்சரிக்கையாக இருக்கவேண்டும். பேரவையில் நடக்காதவற்றை வெளியிடுவதும், நடந்தவற்றைத் திருத்தி வெளியிடுவதும், பேரவை நிகழ்ச்சிகள் குறித்து விமரிசனம் செய்கையில் உறுப்பினர்களுக்கு நோக்கம் கற்பித்து வெளி யிடுவதும், அவை உரிமை மீறல் குற்றத்திற்கு உள்ளாகும், இம்மாதிரி இனிமேல் நிகழா வண்ணம் மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்று இங்கு குறிப்பிட்டுள்ள பத்திரிகைகளை

மிகக் கடுமையாக எச்சரிக்கிறேன். மீண்டும் ஒரு முறை இம் மாதிரி ஏற்படுமானால் அப்பத்திரிகை மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொண்டு, இங்கு எழுப்பப்பட்ட மேலே குறிப்பிட்ட அவை உரிமை மீறல் பிரச்சனைகள் மீது மேல் நடவடிக்கைகள் இல்லாமல் இத்துடன் முடிக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. திருப்பூர் மணிமாறன் அவர்கள் 19–4–1979 அன்று பேரவையில் ''மக்கள் செய்தி'' மற்றும் ''மாலை முரசு'' நாளேடுகள் மீது அவை உரிமை மீறல் குறித்த பிரச்சனையை எழுப்பினார். காவல் துறை, மற்றும் தீயணைப்பு பணிகள் குறித்த மானியக் கோரிக்கைகள் பேரவையில் 18–4–79 அன்று எடுக்கப்பட்டிருக்க, 17–4–79-ந் தேதியே எடுக்கப்பட்டதாக அப்பத்திரிகைகள் பிரசுரித்தது அவை உரிமை மீறிய செயலாகும் என்று மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டார். அப்பத்திரிகைகளிடம் விளக்கம் கேட்டுப் பின்னர் என் தீர்ப்பை அளிப்பதாக நான் தெரிவித்தேன்.

மக்கள் செய்தி நாளேட்டின் ஆசிரியர் தம் விளக்கத்தில் ''வழக்கம் போல நிகழ்ச்சி நிரலின்படி போலீஸ் துறை விவரக் குறிப்பு தாக்கல் செய்யப்பட்டு விடும் என்ற நம்பிக்கையில் அதிலிருந்த முதல்வரின் அறிவிப்புகளை பிரசுரித்தோம். துரதிர்ஷ்டவசமாக அன்றைய நிகழ்ச்சி நிரலில் போலீஸ் துறை மானியம் இடம் பெற வாய்ப்பில்லாது போய் விட்டது. சட்ட சபையை அவமதிக்கும் நோக்கத்துடனோ களங்கம் கற்பிக்கும் நோக்கத்துடனோ நாங்கள் அந்தச் செய்தியை பிரசுரிக்கவில்லை. எதிர்பாராத வகையில் நேர்ந்து விட்ட இந்தத் தவறுதலுக்காக எங்கள் வருத்தத்தை தெரிவித்துக் கொண்டு, இனி அம்மாதிரி நேராது பார்த்துக் கொள்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.'' என்று கூறியுள்ளார்.

தவறுதலுக்கு வருத்தம் தெரிவித்துள்ளதால், அதை ஏற்றுக்கொண்டு, மேல் நடவடிக்கை ஏதும் இல்லாமல், இனிமேல் இவ்விதம் நிகழா வண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டுமென்ற எச்சரிக்கையுடன் இப்பத்திரிக்கை மீதான பிரச்சனையைமுடித்து விடலாம் என்று தெரிவிக்கிறேன்.

(ஆ) மாலை முரசு நாளிதழ் மீது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ''மாலை முரசு'' நாளேடு, இருமுறை கடிதம் அனுப்பியும், விளக்கம் அளிக்காமல், தவணைக் கேட்டுக் கடிதம் அனுப்பியுள்ளது. எனவே, ''மாலை முரசு'' நாளேட்டைப் பொறுத்த வரையில் எழுப்பப்பட்ட பிரச்சனையில் முடிவெடுக்க வேண்டியுள்ளது. பேரவையில் நடை